# வச்சிரகண்டன் - வீமன் சண்டை தெருக்கூத்துப் பனுவலில் காணப்படும் நாடகக் கட்டமைப்பும், பெண்ணிய சிந்தனையும்

கா. அற்புதன்,

*நாடக ஆய்வாளர், மட்டக்களப்பு, இலங்கை.*

**அறிமுகம்**

கூத்தானது சமூகம் சார்ந்த பலவிடயங்களை உட்கருவாகக் கொண்டுள்ளது. ஆடல் பாடலூடாக புராண இதிகாசக் கற்பனைக் கதைகளைக் கொண்டுள்ளதுடன் சமூகசிந்தனையை வெளிப்படுத்துகின்ற ஒரு கருவியாக விளங்குகின்றது. சமூக நல்லுறவை ஏற்படுத்தல், சமூகத்தினை ஒன்றிணைத்தல், அதனூடாக புரிதல், தெளிதல், விளங்கிக் கொள்ளுதல் போன்ற விடையங்களைப் பார்வையாளர்களுக்கு கொடுக்கின்ற தன்மையைக் காணமுடியும். அந்த வகையில் "**வச்சிரகண்டன் - வீமன் சண்டை நாடகப் பனுவலானது**" மகாபாரதத்தின் ஒரு கிளைக்கதையாக அமைந்து தற்கால சமூகவியல் நடத்தைக் கோலங்களை வெளிக்காட்டுவதாக ஆசிரியரால் சித்திரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதான கதையின் பாத்திரங்களைக் கொண்டிருந்தாலும் பேசப்படுகின்ற கருப்பொருளிலும், பாத்திரங்களின் தன்மையிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையைக் காணமுடியும். அவ்வகையில் வச்சிரகண்டன் - வீமன் நாடகப் பிரதியில் மகாபாரதக் கதையின் பிரதான பாத்திரங்களான பாண்டவர்கள், திரௌபதை, மற்றும் கிருஸ்ணர் என்பவர்களோடு புதிய பாத்திரங்களாக உருத்திரகண்டன், வச்சிரகண்டன், மணிமாலிகை, மாயக்குறத்தி போன்ற பாத்திரங்களின் வாயிலாக கதைக் களத்தினை உச்சக்கட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் கதையாசிரியரின் யுக்தி வியக்கத்தக்கது. பாரதப்போர் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான தயாதி சண்டையாக அமைய வச்சிரகண்டன் - வீமன் சண்டையானது கருக்குடும்பத்துக்கிடையிலான சிறு சிறு பிணக்குகளை திருப்புமுனைகளாக்கொண்டு சிறப்பான முறையில் நகர்த்திச் சென்றுள்ளார் ஆசிரியர்.

ஒரு நாட்டில் போர் ஏற்பட்டு அது நிறைவடைந்த பிற்பாடு நிலவும் எதிரொலி அதாவது காயங்கள், இழப்புக்கள், வடுக்கள் பல வருடங்கள் கடந்தும் நீடித்திருக்கும். இவ்வடுக்களினால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள், சிறுவர்கள் என்பதை சமகாலச் சூழலுடன் உற்றுநோக்க இப்பனுவல் வழியமைக்கின்றது.

**கதைச் சுருக்கம்**

இக்கதையானது பாரதப்போர் முடிந்து 18 வருடங்களின் பின் இடம்பெறுகின்ற நிகழ்வாகக் காணப்படுகின்றது. போர் முடிந்து அஸ்தினாபுரத்தை பாண்டவர்கள் ஆட்சிபுரிந்து வருகின்றவேளை அங்கு கௌரவர்களுடைய தேவிமார்கள் அனைவரும் துயரிலிருந்து வெளிவரமுடியாமல் கலங்கி நிற்பதனைக் கண்ணுற்ற தர்மரது மனம் சஞ்சலமடைகின்றது. அதனால் மீண்டும் வனவாசம் செல்லத் தீர்மானித்து இதுகுறித்து திரௌபதையிடம் விளக்குகிறார். அத்தோடு கிருஸ்ணரினாலேயே பாரதப்போர் ஏற்பட்டதாகவும், அதன்மூலம் பல இன்னல்களையும், இழப்புக்களையும் சந்தித்ததாகவும் தர்மர் தம் பத்தினியிடம் கிருஸ்ணரைப் பற்றிக் குறை கூறுகின்றார்.

தனது தமயனைக் குறைகூறுவதைப் பொறுக்காத பாஞ்சாலி தர்மரோடு வாய்தர்க்கம் செய்துகொண்டு வீமனை நோக்கி வருகிறாள். அவனிடம் தர்மருடனான விவாதம் பற்றிகூறக் கேட்ட வீமன் தர்மரை குறை கூறியதால் கோபமுற்று அவளை அவ்விடம்விட்டு அகலுமாறு கூறுகிறான். இவ்வாறு இருவரிடமும் வாக்குவாதப்பட்டு தனக்குள் புலம்பிக்கொண்டிருக்க அச்சமயம் அங்கு வந்த அர்சுனனிடமும் இதைப்பற்றி விபரிக்கின்றாள் திரௌபதை. அதேவேளை தர்மர் அர்சுனனைநோக்கி நாட்டை ஆளும்படியும், தான் வனம்புகப்போவதாகவும் கூறி அறிவுரை வழங்கினறார். அவ்வறிவுரைகளைச் செவிசாய்த்த அர்சுனன் கிருஸ்ணரை இனி நினைவில் கொள்ளக்கூடாது எனக்கூறி நாட்டை ஆளவும் சம்மதிக்கின்றான். இதனைப் பொறுக்காத திரௌபதை அர்சுனன்மேல் கோபம் கொள்கிறாள்.

அப்போது இருவருக்கும் வாக்குவாதம் அதிகரிக்க இறுதியில் திரௌபதையை வீட்டைவிட்டு வெளியேறும்படி கூறுகிறான்.

திரௌபதை துவாரகை நோக்கிச் சென்று அங்கு தமயனிடம் நடந்தவற்றை எடுத்தியம்புகிறாள். அவளின் சபதத்தினை நிறைவேற்றி அவளது துயர் தீர்க்கும்பொருட்டு மாயக்குறத்தி வேடமிட்டுச் செல்கின்றார். இதற்கிடையில் பத்தினி வீட்டைவிட்டு வெளியேறியதால் மனம்வாடிய தர்மர் வீமன் அர்சுனனிடம் அவளை அழைத்துவருமாறு பணிக்கின்றார். இருவரும் திரௌபதையைத் தேடிச்செல்கின்றனர். ஒரு வனத்தில் மாயக்குறத்தி வேடமிட்டுவந்த கிருஸ்ணரைக் காண்கின்றனர். மாயக்குறத்தி இருவருக்கும் குறி சொல்கிறாள். அதில் ''நீங்கள் இருவரும் செத்துமடியப் போகிறீர்கள் எனக்கூறுகிறாள்'' இதேவேளை புஷ்பகரப் பட்டின அரசன் உருத்திரகண்டன் தனது தங்கையை மலர்பறித்துவர கானகம் அனுப்புகிறான். அப்போது வீமன் மணிமாலிகையைக் காண்கின்றான். தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு அவளிடம் கூறும்போது இருவருக்கும் வாய்த் தர்க்கம் அதிகரிக்க, அவளது சேலையை வீமன் பற்றியிழுக்க அவள் மாயமாக மறைகிறாள். அந்த நேரத்தில் மாயக்குறத்தி உருத்திரகண்டன் மனைநோக்கிச் சென்று ''வீமன் மணிமாலிகையைக் களவாடிச் செல்லவிருப்பதாகவும், அவளைக் காப்பாற்ற வீமனோடு போர் புரியுமாறும் குறி கூறுகிறாள். பிற்பாடு மணிமாலிகை வனத்திடை நடைபெற்ற சம்பவத்தினை உருத்திர கண்டனிடம் கூறக்கேட்டு கோபமடைந்த ருத்திரன் வச்சிரகண்டனை, வீமனை சிறைப்பிடித்து வருமாறு கட்டளையிட அவனும் வீமன் மற்றும் அர்சுனனை போரில் வென்று சிறைப்பிடித்து வருகின்றான்.

இது இவ்வாறிருக்க மனையாளை அழைத்துவரச்சென்ற சகோதரர்கள் திரும்பிவராமையால் துயருற்ற தர்மர் சகாதேவனிடம் சன்னதம் பார்க்குமாறு கூற அவனும் அவ்வாறே பார்த்து தன் சகோதரர்கள் சிறைப்பட்டிருப்பதைத் தெரிவித்ததோடல்லாமல் அவர்களைத் தங்களால் வெல்லமுடியாது எனவும் இதற்குத் தீர்வாக கிருஸ்ணரையே நாடவேண்டும் எனக்கூறுகிறான். இதனால் தர்மர் கிருஸ்ணரைத் துதிக்கின்றார். கிருஸ்ணர் ருக்மினிதேவி மற்றும் திரௌபதையுடன் அஸ்தினாபுரம் வருகின்றனர். வீமனர்சுனனை மீட்க திரௌபதையின் தலைமையில் படையினை புஷ்பகரபட்டிண் நோக்கி அனுப்புகின்றார். இதையறிந்த வச்சிரகண்டன் தனது தங்கை மணிமாலிகையை போருக்கு அனுப்புகின்றான். போரில் மணிமாலிகையின் சிரம் கொய்கிறாள் திரௌபதை. இதையறிந்த அசுர சகோதரர்கள் இருவரும் திரௌபதையுடன் போர்செய்கின்றனர். இதில் திரௌபதை தோல்வியுறுகிறாள். மீண்டும் கிருஸ்ணரின் உதவிநாடுகிறாள். அவரின் ஆலோசனையின் கீழ் போர்யுக்திகளைக் கையாண்டு இரு அசுரர்களையும் அழிக்கின்றாள். அசுரர்களின் சாகாவரம் காரணமாக உருத்திரகண்டன் கிளியாகவும், வச்சிரகண்டன் மரப்பம்பையாகவும், மணிமாலிகையின் சிரம் மணியாகவும், உடல் உடுக்கையாகவும் திரௌபதையிடம் அடக்கமாயின. பின்னர் தன் கனவன்கள் இருவரையும் சிறை மீட்கிறாள்.

அவர்கள் இருவரும் திரௌபதையிடம் மன்னிப்புக் கோருகின்றனர். பின்னர் கிருஸ்ணர் ஐவரையும் திரௌபதையின் காலில் விழுமாறு கோருகிறார். அதன்பின் அனைவரும் ஒன்றுசேர்கின்றனர். இவ்வாறு நாடக பனுவலில் கதை கட்டமைக்கப்பட்டுள்ளது.

**நாடகக் கட்டமைப்பு**

ஒரு நாடகப் பிரதியில் கட்டமைப்பு என்பது முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அது நாடகத்தினை ஒரு தளத்திலிருந்து இன்னொருதளத்திற்குக் கொண்டு செல்வதற்கு உறுதுணையாக அமைகின்றது. அந்தவகையில் இப்பனுவலின் கட்டமைப்பினை நோக்குகின்றபோது சிறப்பான முறையிலே நூலாசிரியரால் சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருப்பதனைக் காணமுடியும். அதாவது ஆங்கிலத்தில் Plot என்று கூறப்படுகின்ற ஒழுங்கமைப்பு என்பது களம், களத்தினூடாக காட்சி, காட்சியினூடாக உரையாடல், உரையாடலூடாக செயல் என்றரீதியில் அமைந்துள்ளது. களத்தினை நோக்கும்போது அஸ்தினாபுரம், துவாரகை, வனம், புஷ்பகரப்பட்டினம், எனும் நான்கு களங்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அடுத்து நாடகப்பிரதியில் காணப்படும் பிரதான அம்சங்களாக ஆரம்பம், முரண் (Confilt), வளர்ச்சி, உச்சம், உச்சக்கட்டம், Falling Action , முடிவு போன்ற விடையங்கள் காணப்படுகின்றன. ஆரம்பம் (Exposition) என்பது கதையினை அறிமுகப்படுத்தும் போது அதற்கான பின்னனிகளைக் கூறுவதும் ஆரம்ப அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் தர்மர் முன்பு நடந்தபோர், திரௌபதியின் துயர்தீர்த்த விடயங்கள், பின் பதினெட்டு வருட அரசாட்சி, போன்றவற்றை நயமுற கூறியிருப்பது இப்பனுவலின் ஆரம்பமெனலாம். இதனை

**"சோதி எனும் பாஞ்சாலி துயர் தீர்த்து**
**சொன்ன சொல் மாறாமல் குழல் முடித்தேன்"**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

அடுத்து முரண் (Confilt) என்பது ஒரு பாத்திரமானது தனக்கு ஏற்படுகின்ற பிரச்சினையிலிருந்து மீள்வாதற்கு முயல்கின்றபோது ஏற்படுகின்ற சிக்கல்கள் முரண் எனப்படுகின்றது. இம் முரணானது மனிதனுக்கும் அவன் மனதிற்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் இயற்கைக்கும், மனிதனுக்கும் சமுகத்திற்கும் இடையிலாக வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. அந்தவகையில் இந்நாடகப் பனுவலில் இடம்பெறும் தர்மரின் சஞ்சலம், திரௌபதையின் புலம்பல் என்பன மனிதனுக்கும் மனதிற்கும் இடையேயான முரணினையும், தர்மர்க்கும் திரௌபதைக்கும், வீமனுக்கும் மணிமாலிகைக்கும், வீமன் வச்சிரகண்டன் போர் மனிதனுக்கும் மனிதனுக்குமிடையிலான முரணுக்குச் சான்றாகக் கூறலாம்.

வளர்ச்சி (Rising Action) என்பது கதையினை அடுத்த கட்டத்தினை நோக்கி எடுத்துச் செல்லும் தன்மையினைச் சுட்டுகிறது. திரௌபதை கதைக் களத்தினை வளர்த்துச் செல்லும் ஒரு பாத்திரமாக சித்திரிக்கப்பட்டுள்ளாள். அவளுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெறும் பொருட்டு இடம்பெறும் சம்பவங்கள் நாடகத்தினை அடுத்தடுத்த களங்களுக்கு நகர்த்திச்செல்கிறது.

உச்சம் (Climax) என்பது நாடகத்தின் திருப்புமுனையாக இருக்குமிடம் உச்சம் எனப்படும். அந்த வகையில் பிரதியின் திருப்புமுனையாக மணிமாலிகை வீமன் சந்திப்பு கட்டமைக்கப்பட்டுள்ளது. இது நாடகத்தினை உச்சக்கட்டத்திற்கு நகர்த்திச் செல்கின்றது. உச்சக்கட்டத்தினை நோக்குகின்ற போது திரௌபதை மற்றும் மணிமாலிகைக்கிடைலான போர், திரௌபதை மற்றும் வச்சிரகண்டனுக்கிடைலான போர், அதனூடாக திரௌபதை தோற்றல், மீண்டும் விஸ்பரூபம் எடுத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

Falling Action என்பது உச்சக்கட்டத்திற்கும் முடிவிற்கும் இடையில் நிகழ்கின்ற செயற்பாடாகும். அதாவது உச்சக்கட்டத்திலிருந்து படிப்படியாக நாடகத்தினை இறுதிக்கட்டத்திற்கு நகர்த்திச்செல்லுதலாகும். அந்தவகையில் இந்நாடகப் பிரதியை நோக்கும்போது வீமனர்சுனன் சிறைப்படல், திரௌபதை சபதத்தை நிறைவேற்றல், போன்ற விடையங்களை எடுத்துக்காட்டலாம்.

முடிவை நோக்கும்போது மீண்டும் திரௌபதை பாண்டவர்களுடன் இணைதல், பாண்டவர்கள் தங்கள் தவறை உணர்ந்து கிருஸ்ணருடன் இணைதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறாக நாடகப் பனுவலின் கட்டமைப்பின் இலக்கணம் மீறாமலும் யதார்த்த நிலையின் மரபு மீறாமலும் பண்டை இதிகாசத்தினை சமகாலச் சூழலோடு இணைத்து சுவாரசியமாக கதைக்களத்தினை நகர்த்திச் சென்றுள்ளமைக்கு நாடகக் கட்டமைப்பு முறையே காரணம் எனலாம்.

### பெண்ணிய சிந்தனைகள்

பெண்ணியம், பெண்ணியவாதம் எனும் பதங்கள் தோற்றம்பெறாத இதிகாச கதையுடன் தொடர்புடைய வச்சிரகண்டன் - வீமன் சண்டை நாடகப் பனுவலில் நூலாசிரியர் பெண்ணியத்தினை நடைமுறையில் யதார்த்தமாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் இந் நாடகத்தில் வெயிப்படுத்தப்படுமாற்றை நோக்குகையில்,

"இல்லாள்" என்பது மனைவியைக் குறிக்கின்றது. அவள் இல்லாத வீடு வீடல்ல. அவளின்றி இல்லம் சிறக்காதென்பதனாலேயே பெண்களை இல்லாள், மனையாள், இல்லத்தரசி என பெரியார் சுட்டுகின்றனர் போலும். திரௌபதை வீட்டைவிட்டு வெளியேறியதும் தர்மர் மிகவும் வருந்துகின்றார். தம் தம்பிமார்களை அழைத்து பாஞ்சாலி இல்லாமல் அரண்மனையே ஒளியிழந்து, கலையிழந்து இருக்கின்றது, ஆதலால் நீங்களிருவரும் அவளை மீண்டும் இங்கு அழைத்துவருக எனக்கூறுகிறார். இதனை

**" தையல் பாஞ்சாலி இல்லை தம்பியரே**
**நம்மிட மாளிகை நல்லிருளுற்றது.......**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR 

**இருவரும் ஒன்றாய் கூடியே**
**சென்றிடும் தேடியே……….."**

எனும் பாடல் மூலம் அறியலாம்.

பெண்குளக்கும் கருத்துச் சுதந்திரம் இருக்கின்றது. அவர்களுடைய நியாயமான கருத்துக்களுக்கு குடும்பத்தினர் மதிப்பளிக்க வேண்டும் என்ற பெண்ணிய சிந்தனை ஆசிரியர் இந்நாடகத்தின் வாயிலாக துள்ளியமாக எடுத்துக்காட்டுகின்றார். தர்மர், கிருஸ்ணரை குறைகூறும் போது அவரது தவறினை திரௌபதை சுட்டிக்காட்டுகிறாள். அதன் விளைவாக அவளது கருத்து நிராகரிக்கப்பட்டு, கணவன்மார்களால் அவமானப்படுத்தப்பட்டு வீட்டைவிட்டு வெளியேற்றப்படுகிறாள். ஆயினும் தமையனான கிருஸ்ணர் அவளது கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்றார். அவர் நினைத்திருப்பின் தங்கையை சமாதானம் செய்து இல்லத்திற்கு திருப்பி அனுப்பிருக்கலாம். எனினும் அவ்வாறு செய்யாமல் அவளது சுயமரியாதையை நிலைநிறுத்த முனைகிறார். அதற்காக மாயக்குறத்தி வேடமணிந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாடகத்தின் வாயிலாக ஆசிரியர் ஆண், பெண் சமத்துவத்தினையும் எடுத்தியம்பத் தவறவில்லை. இதனை கிருஸ்ணர் மாயக்குறத்தி வேடமிடுவதன் மூலம் அறியலாம். அவர் நினைத்திருந்தால் ஆண்வேடம் புனைந்திருக்கலாம். இங்கு ஆண் பெண் சமத்துவத்தை மட்டுமின்றி பெண்களும் அக்காலத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்னதனையும் அவரவர் தொழிலில் தனிப்பட சிறந்து விளங்கியமையையும் அறிய முடிகிறது.

மேலும் பெண்கள் சிறந்த தலைமைத்துவப் பண்பு மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். கிருஸ்ணர் வீமனர்சுனனை மீட்பதற்காக புஷ்பகரபட்டிணத்தின் மீது போர் தொடுப்பதற்காக திரௌபதையை படைத் தலைவியாக நியமிக்கின்றார். வச்சிரகண்டனும் திரௌபதைக்கு எதிராக தன் தங்கை மணிமாலிகையை அனுப்புகின்றான். போரில் அவள் சிரசினைக் கொய்கிறாள். பின்னர் கிருஸ்ணரின் உதவியுடன் உருத்திரகண்டன் மற்றும் வச்சிரகண்டனையும் அழித்து தன் கணவன்மார்களை சிறைமீட்கிறாள். இங்கு மேலுமொரு பெண்ணிய சிந்தனையை நாடகாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். ஆண் பெண் என்ற ஏற்றத்தாழ்வுகள் இப் பாரினிலே இல்லை என்பதேயாம். இங்கு சிறைப்பட்டிருப்பது பாரதத்திரு நாட்டின் தலை சிறந்த வீரர்கள். அவர்களைச் சிறைமீட்க ஒரு பெண் செல்கிறாள். இங்கு கிருஸ்ணர் நினைத்திருந்தால் தாமே சென்று அவர்களை மீட்டிருக்கலாம். அல்லது பாண்டவர்களில் மீதமுள்ள மூவரையும் அனுப்பிருக்கலாம். ஏன் பாஞ்சாலியை அனுப்பினார். ஆண்களுக்கு சரிநிகர் பெண்கள் என்பதை உலகத்தாருக்கு எடுத்தியம்பவேயாகும்.

அதுமாத்திரமின்றி பெண்கள் ஒவ்வொருவரும் தங்களது கற்பினைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்கு தன்னளவில் மனத்தினாலும், உடலினாலும், செயலினாலும், யுக்தியினாலும் திறமையும், விலிமையுமிக்கவர்களாக இருக்கசவேண்டும் எனும் விழிப்புணர்வையும் இங்கு பதிவு செய்கிறார் ஆசிரியர் . இதனை உருத்திரகண்டன் மலர்கள் பறிப்பதற்காக மணிமாலிகையை வனம் நோக்கி அனுப்பும்போது

**"வடிவினைக் கண்டு மோகம் வாலிபர் கொள்வாரப்போ**
**கடிமையாய் வார்தையாடி கர்ப்பினைக் காப்பாய்தானே"**

எனும் உரையாடல் வாயிலாக அறியலாம்.

மேலும் இந்நாடகத்தின் வாயிலாக சிறந்த சமூக சிந்தனையையும் முன்வைக்கின்றார். ஒருவர் எவ்வளவுதான் உயர்ந்த நிலையில் அல்லது பதவியில் இருந்தாலும் தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கோருவதனால் அவர்களது நிலை ஒருபோதும் சிறுமையடைவதில்லை. மாறாக மாட்சிமையே அடைகின்றனர் என்பதேயாகும். இதனை போரில் வென்று வீமன் மற்றும் அர்சுனனை சிறைமீட்டு வந்தபின்னர் பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியின் காலில் விழுலதனூடாக அறியலாம். இதனை

**"தங்கள் குலம் செழிக்கச் செய்தாய் செங்கமலக் கண்ணா சொல்போல்**
**மங்கையாம் பாஞ்சாலிக் காலில் மன்னவர் வீழ்ந்தோ மாயா"**

பெண்கள் எவ்வளவுதான் ஏற்றம் பெற்றிருப்பினும் அன்றுமுதல் இன்று வரை ஓர்சில சமூகக் காரணிகளால் சார்ந்திருக்க வேண்டியதன் சந்தர்ப்ப சூழ்நிலைகளையும்கூட தொடர்புபடுத்திக் காட்டியிருப்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நாடகப் பாத்திரங'களில் ஒருத்தியாகிய மணிமாலிகையின் பின்வரும்

**“வையத்தில் பெண்பாலும் வனம்போகலாகாதே**
**தையல் பட்ட கஸ்டம் தாங்கொனா வந்தேன்’’**

எனும் கூற்றின் வாயிலாக அறியலாம்.

இவ்வாறாக மேற்குறித்த விடையங்களினூடாக நோக்குகின்ற போது பெண்களின் நியாயமான கருத்துக்களுக்குச் செவிசாய்த்தல், அதை புறக்கணிப்பதனால் ஏற்படும் பாதக விளைவுகள் மற்றும் பெண்கள் விரும்பிய தொழிலை செய்யும் நிலை, அவர்கள் அத்தொழிலில் சிறந்துவிளங்கியமை, பெண்கள் தலைமைத்துவ நிலையில் செயற்பட்டமை, போன்ற பெண்ணிய சிந்தனைகளைப் பனுவலாசிரியர் வாழ்வியலோடு இணைத்து யதார்தமாக நித்திரித்துக்காட்டியுன்மையை அறியமுடிகிறது. மேலும் பெண்களிடையே இயல்பாக காணப்படுகின்ற அன்பு, பாசம், அதனால் ஏற்படும் ஊடல், கூடல்கள், பாசப் பிணக்குகளை எடுத்துக்கட்டுவதனூடாக சமுகத்தில் கணவன் மனைவி உறவு எவ்வாறு பேணப்படவேண்டும் என்பது குறித்தும் வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளையும் அதிலிருந்து ஒரு பெண் எவ்வாறு மீண்டு வருகிறாள் என்றவாறான பல்வேறு தகவல்களை நாடகத்தின் வாயிலாக ஆசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு போற்றுதற்குரியதே.

**துணைநூற் பட்டியல்**


[1] Abimathi Jeevanadan: தெருக்கூத்தை கொண்டாவோம், (https://roar.media/tamil/main/arts-culture/celebrate-the-art-of-koothu), 2020

[2] Asianet Tamil, first publication, Chennai (https://tamil.asianetnews.com/tamilnadu-chennai/life-of-dissolving-street-artistsfamilies-with-no-income-pvbg4p), 2019.

[3] Green, Jesse, Review: A room in India overflows with astonishing visions, the New York time, 2017.

[4] John Howard Lawson- Theory and Techniques of playwriting, New York, 1960

[5] Pushparani, தமிழ இலக்கியத்தில அறிவியல் சிந்தனைகள், International Refereed Journal of Tmil Research,(Volume 1), www.irjtsjournal.org, 2019.

[6] The structure of the play- https://www.alyve.org>acting

[7] Varathpande, Monohar Laxman, History of Indian theatre, Abhinav publications, 1990.

[8] பெரியசாமி.பி.முனைவர்,தொல்காப்பியம் சுட்டும் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள், International Refereed Journal of Tmil Research,(Volume 2), www.irjtsjournal.org, 2020.

[9] தெருக்கூத்து பனுவல் - ‘‘வச்சிரகண்டன் - வீமன் சண்டை தெருக்கூத்துப் பனுவலில;’’, தமிழ் நாடு, இந்தியா.

[10] கோ.சுப்பிரமணியம், தெருக்கூத்தும் பார்வையாளர்களும் இதமிழ் ; சுரங்கம்.காம் (http://www.tamilsurangam.in/general_knowledge/research_ideas/research_ideas_37.html), 2021.